பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

19 06 2025 THURSDAY 12 40 PM ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. சர்வதேச யோகா தின கொண்டாட்டங்களை மக்கள் இயக்கமாக உருவாக்க தேவையான நடவடிக்கைகளை பஞ்சாயத்து அமைப்புகள் மேற்கொள்ள வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

2. பல்கலைக் கழகங்களுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலில் 54 இந்திய பல்கலைக் கழகங்கள் இடம்பெற்றுள்ளதாக மத்திய கல்வியமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

3. வாக்காளர் அடையாள அட்டைகளை விரைவாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

4. இந்தியா-பாகிஸ்தான் இடையே சண்டை நிறுத்தத்தை மேற்கொள்வதற்கான முடிவினை, இருநாடுகளின் தலைவர்களே தீர்மானித்ததாக அமெரிக்க அதிபர் திரு. டொனால்டு ட்ரம்ப் கூறியுள்ளார்.

5. ஆசிய ஜுனியர் மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Rishav Choudhary அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

<<<<<<<>>>>>>>>

சர்வதேச யோகா தின கொண்டாட்டங்களை மக்கள் இயக்கமாக உருவாக்க தேவையான நடவடிக்கைகளை பஞ்சாயத்து அமைப்புகள் மேற்கொள்ள வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக பஞ்சாயத்து அமைப்புகளின் தலைவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர் இக்கோரிக்கை விடுத்துள்ளார்.

சர்வதேச யோகா தினம் வரும் சனிக்கிழமை கொண்டாடப்படவுள்ளதை சுட்டிக்காட்டிய பிரதமர், அன்றைய தினம் சிறப்பு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யுமாறு வலியுறுத்தியுள்ளார்.

யோகா பயிற்சி நம் நாட்டில் மட்டுமின்றி உலக அளவிலும் மக்களின் ஆரோக்கியத்தை பேணுவதில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாக அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இது நமக்கு கிடைத்த பெருமை என்றும் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இதற்கிடையே, சைப்ரஸ், கனடா, குரேஷியா ஆகிய நாடுகளில் அரசுமுறைப் பயணத்தை முடித்துக் கொண்டு பிரதமர் புதுதில்லி புறப்பட்டார்.

குரேஷியா பிரதமர் மற்றும் அதிபருடன் நடத்திய பேச்சுக்கள் ஆக்கபூர்வமாக அமைந்ததாகவும் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இந்த பேச்சுக்களுக்குப் பின்னர், வேளாண்மை, கலாச்சாரம், தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான ஒப்பந்தங்கள் இருநாடுகளுக்கு இடையே கையெழுத்தாகின.

Zagreb பல்கலைக் கழகத்தில் ஹிந்தி இருக்கையை ஏற்படுத்துவதற்கான ஒப்பந்தமும் கையெழுத்தாகியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>>>>

பல்கலைக் கழகங்களுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலில் 54 இந்திய பல்கலைக் கழகங்கள் இடம்பெற்றுள்ளதாக மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், 2014ஆம் ஆண்டு 11 பல்கலைக் கழகங்கள் மட்டுமே இந்த பட்டியலில் இடம்பெற்றதாக் தெரிவித்தார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு, உயர்கல்வி துறையின் வளர்ச்சிக்காக மேற்கொண்ட நடவடிக்கை காரணமாக, தற்போது இந்த எண்ணிக்கை ஐந்து மடங்கு அதிகரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய கல்விக் கொள்கை, கல்வித்துறையின் வளர்ச்சிக்காக மேற்கொள்ளப்பட்ட புரட்சிகரமான சீர்திருத்த நடவடிக்கை என்றும் அவர் கூறியுள்ளார்.

ஜி20 அமைப்பில் இடம்பெற்றுள்ள நாடுகளிடையே, கல்வித்துறையில் விரைவான வளர்ச்சியை கண்டு வரும் நாடாக இந்தியா திகழ்கிறது என்றும் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>>

வெளிநாடுகளில் வசிக்கும் இந்தியர்களின் பாதுகாப்பிற்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்துள்ளதாக வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு. கீர்த்திவர்தன் சிங் கூறியுள்ளார்.

ஈரானிலிருந்து பாதுகாப்பாக அழைத்து வரப்பட்ட இந்தியர்களை, புதுதில்லி விமான நிலையத்தில் வரவேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

ஈரான் - இஸ்ரேல் இடையேயான மோதல் தொடர்ந்து நீடித்து வருவதை அவர் சுட்டிக்காட்டினார்.

இதன் காரணமாக, ஈரானில் உள்ள இந்தியர்கள் அனைவரையும் பாதுகாப்பாக மீட்க தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்று அவர் தெரிவித்தார்.

இதற்கென சிறப்பு விமானங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதுவரை 350 பேர் இந்தியா திரும்ப விண்ணப்பித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஈரானில் உள்ள இந்தியர்களுக்கு உதவுவதற்கென 24 மணிநேரமும் செயல்படும் உதவி மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் திரு. கீர்த்திவர்தன் சிங் கூறினார்.

<<<<<<<>>>>>>>

இதற்கிடையே, இஸ்ரேல் - ஈரான் இடையேயான மோதல் மேலும் தீவிரமடைந்துள்ளது.

இஸ்ரேல் விமானப்படையினர் ஈரான் மீது தொடர்ந்து தாக்குதலை நடத்தி வருகின்றனர்.

Tehran-ல் உள்ள 40 இடங்களை குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக இஸ்ரேல் ராணுவம் கூறியுள்ளது.

இதில் ஈரான் பொது பாதுகாப்பு தலைமையகம் தாக்கப்பட்டதாகவும் இஸ்ரேல் அரசு தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் தாக்குதல் காரணமாக இதுவரை 500-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாகவும், ஆயிரத்து 300க்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளதாகவும் ஈரான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் ஈரானும் ஆயிரத்துக்கு மேற்பட்ட ட்ரோன்கள் மூலம், இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தியதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

400க்கும் மேற்பட்ட ஏவுகணையும் ஈரான் செலுத்தியுள்ளது. இருப்பினும் பெரும்பாலானவற்றை இஸ்ரேல் வான் பாதுகாப்பு கட்டமைப்பு தகர்த்ததாக தகவல்கள் கூறுகின்றன.

ஈரான் நடத்திய தாக்குதல் காரணமாக 25 பேர் உயிரிழந்துள்ளதாகவும், 500க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாகவும் இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இந்த மோதல் குறித்து விசாரிப்பதற்காக ஐ.நா பாதுகாப்பு குழுவின் அவசரக் கூட்டத்திற்கு நாளை அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

சீனா, பாகிஸ்தான், ரஷ்யா ஆதரவுடன் ஈரான் கொடுத்த கோரிக்கையை ஏற்று, இந்தக் கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஈரான் - இஸ்ரேல் மோதல் தொடங்கிய பின்னர் இரண்டாவது முறையாக ஐ.நா பாதுகாப்புக் குழுக் கூட்டம் நடைபெறவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>>>

வாக்காளர் அடையாள அட்டைகளை விரைவாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இதற்கென புதிய வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதன்படி, வாக்காளர் பட்டியலில் திருத்தம் மேற்கொள்ளப்பட்ட 15 நாட்களுக்குள் புகைப்பட அடையாள அட்டை வழங்கப்படும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த புதிய நடைமுறையின் படி, தபால் துறையின் மூலமாக வாக்காளருக்கு அடையாள அட்டை வழங்கும் வரை அனைத்து நடவடிக்கைகளும் கண்காணிக்கப்பட்டு, குறுந்தகவலாக சம்பந்தப்பட்டவருக்கு அனுப்பப்படும் என்றும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>>

நான்கு மாநிலங்களுக்கு உட்பட்ட ஐந்து சட்டப்பேரவை தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் வாக்குப்பதிவு, தற்போது நடைபெற்று வருகிறது.

குஜராத்தின் Kadi, Visavadar ஆகிய சட்டப்பேரவை தொகுதிகளிலும், கேரளாவின் Nilambur, மேற்குவங்கத்தின் Kaliganj, பஞ்சாபின் Ludhiana தொகுதிகளிலும், வாக்குப்பதிவு அமைதியாக நடைபெற்று வருவதாக எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த தொகுதிகளில் வாக்கு எண்ணிக்கை வரும் திங்கட்கிழமை மேற்கொள்ளப்படும்.

<<<<<<<>>>>>>>>

சர்வதேச யோகா தினம் வரும் சனிக்கிழமை கொண்டாடப்படுவதை ஒட்டி நாடுமுழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழகத்தில் நடைபெற்று வரும் யோகா விழிப்புணர்வு நிகழ்ச்சிகளில் பொதுமக்கள் ஆர்வத்துடன் பங்கேற்று வருகின்றனர்.

யோகா உடல்நலனை மட்டுமின்றி, மனநலனையும் சீராக பராமரிக்க உதவிடும் என்று தேனியைச் சேர்ந்த யோகா பயிற்சியாளர் திருமதி. ஜீவிகா ரேகா எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - ஜீவிகா ரேகா 46 செகண்ட்ஸ்)

யோகா பயிற்சி தங்களுக்கு பெரிதும் பயனளித்துள்ளதாக விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பங்கேற்றவர்கள் தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட் - பங்கேற்றோர் 59 செகண்ட்ஸ்)

<<<<<<<>>>>>>>>

இந்தியா – பாகிஸ்தான் இடையே சண்டை நிறுத்தத்தை மேற்கொள்வதற்கான முடிவினை, இருநாடுகளின் தலைவர்களே தீர்மானித்ததாக அமெரிக்க அதிபர் திரு. டொனால்டு ட்ரம்ப் கூறியுள்ளார்.

வாஷிங்டனில் பாகிஸ்தான் ராணுவ தலைமைத் தளபதி ஜெனரல் அசிம் முனீருடன் நடத்திய பேச்சுக்களுக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனை தெரிவித்தார்.

சண்டை நிறுத்தத்தை மேற்கொண்டதற்காக அசிம் முனீருக்கு நன்றி தெரிவித்துக் கொண்டதாகவும் அவர் கூறினார்.

இந்தியா – பாகிஸ்தான் இடையே வர்த்தக ஒப்பந்தம் குறித்து பேச்சுக்கள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் திரு. டொனால்டு ட்ரம்ப் தெரிவித்தார்.

**<<<<<<<>>>>>>>>**

ஆசிய ஜூனியர் மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Rishav Choudhary அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

வியட்நாமில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 55 கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர் 9-1 என்ற புள்ளிக்கணக்கில் வியட்நாமின் Trong Nam Nguyen–ஐ வென்றார்.

**<<<<<<<>>>>>>>>**

சிங்கப்பூரில் நடைபெற்று வரும் ஆசிய கோப்பை வில்வித்தை போட்டியின் கலப்புக் குழு பிரிவுகளில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

**<<<<<<<>>>>>>>>**